திருத்தப்பட்டது.

செ.வெ.எண்-38 நாள்-21.08.2021

# அரியலூர் மாவட்டம்
# பட்டுப்புடவைகள் மற்றும் கைவினைப்பொருட்களை மின்வணிகம் மூலமாக விற்பனை செய்யும் திட்டத்தினை மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் திரு.எஸ்.எஸ்.சிவசங்கர் அவர்கள் தொடங்கி வைத்தார்கள்.

அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், மகளிர் சுயஉதவிக்குழுவினர் மூலமாக உற்பத்தி செய்யப்படும் பட்டுப்புடவைகள் மற்றும் கைவினைப்பொருட்களை உலக அளவில் மின்வணிகம் மூலமாக விற்பனை செய்யும் திட்டத்தினை மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் **திரு.எஸ்.எஸ்.சிவசங்கர்** அவர்கள் இன்று (21.08.2021) தொடங்கி வைத்தார்கள்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.பெ.ரமண சரஸ்வதி, இ.ஆ.ப.,** அவர்களும், ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் **திரு.க.சொ.க.கண்ணன்** அவர்களும் முன்னிலை வகித்தனர்.

**இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்ததாவது,**

அரியலூர் மாவட்டத்திற்குட்பட்ட ஜெயங்கொண்டம், தேவாமங்கலம், சின்னவளையம், உட்கோட்டை, கங்கைகொண்டசோழபுரம், படநிலை, மேலணிக்குழி, செங்குந்தபுரம், கல்லாத்தூர், விளந்தை, கூவாகம், கொடுக்கூர், ராதாபுரம், அகரம், இலையூர், மருதூர், சிறுகளத்தூர், உஞ்சினி, நல்லாம்பாளையம், கோடாலிகருப்பூர், உதயநத்தம் உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த 7000-க்கும் மேற்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த நபர்கள் தங்கள் சொந்த தறியின் மூலமாக பட்டுப்புடவைகளை உற்பத்தி செய்து வருகின்றனர். மேலும், ஆண்டிமடம், விளந்தை, வாரியங்காவல், இலையூர் உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த 700-க்கும் மேற்பட்ட மகளிர் சுயஉதவிக்குழு உறுப்பினர்கள் மூலமாக உற்பத்தி செய்யப்படும் மண்பாண்டப் பொருட்கள், கம்பு, சோளம், முந்திரி பருப்பு உள்ளிட்ட உணவுப்பொருட்களிலிருந்து மதிப்புக்கூட்டப்பட்ட உணவுப்பொருட்கள், சணல் பை தயாரித்தல், பனை ஓலைகளிலிருந்து கைவினைப் பொருட்கள் மற்றும் கலைப்பொருட்கள் அதிக அளவில் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது.

அரியலூர் மாவட்டத்தில் காஞ்சிபுரம், கும்பகோணம், திருபுவணம் உள்ளிட்ட நகரங்களுக்கு இணையாக உற்பத்தி செய்யப்படும் உயர் தரத்திலான பட்டுப்புடவைகள் மற்றும் மகளிர் சுயஉதவிக்குழுவினர் மூலம் பனை ஓலைகளிலிருந்து உற்பத்தி செய்யப்படும் கைவினைப் பொருட்களான கைப்பை, கூடைகள், அழகு சாதனப் பொருட்கள் மற்றும் மதிப்புக்கூட்டப்பட்ட உணவுப்பொருட்களின் விற்பனையை ஊக்குவிக்கும் வகையில் மாவட்ட நிர்வாகத்தின் www.ariyalur.nic.in என்ற இணையதளத்தில் அதற்கென தனிப்பிரிவு (கைத்தறி) தொடங்கப்பட்டுள்ளது. இப்பிரிவில் பட்டுப்புடவைகள் மற்றும் கைவினைப் பொருட்களின் விபரங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளது. வாடிக்கையாளர்கள் தங்களுக்கு பிடித்த பட்டுப்புடவைகள் மற்றும் கைவினைப்பொருட்களை தேர்வு செய்து அதிலுள்ள வாட்சப் எண்ணில் தொடர்பு கொண்டு தங்களுக்குண்டான பொருட்களை பெற்றுக்கொள்ளலாம்.

மேலும், மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் மின் வணிகம் (e-Commerce) மூலம் விற்பனை செய்ய தனிப்பட்ட செயலி உருவாக்கப்பட உள்ளது. இதன் மூலம் நெசவாளர்கள் மற்றும் கைவினை கலைஞர்கள் மூலமாக உற்பத்தி செய்யப்பட்ட பட்டுப்புடவைகள் மற்றும் கைவினைப்பொருட்களின் வடிவமைப்பின் புகைப்படம், தயாரிப்பு குறியீடு, சிறப்பம்சம் மற்றும் அதன் விலை குறித்தும் இடம் பெறும் வகையில் உருவாக்கப்படவுள்ளது.

எனவே, பொதுமக்கள் அனைவரும் அரியலூர் மாவட்டத்தின் பெருமையான பட்டுப்புடவைகளை அதிக அளவில் மின் வணிகத்தின் மூலம் வாங்கி பயனடையலாம். மேலும், நமது மாவட்ட நெசவாளர்களின் திறமையை வெளிக்கொண்டு வரும் வகையில் நடைபெற்று முடிந்த சுதந்திர தின விழாவில் நமது மாவட்ட நெசவாளர்களால் உற்பத்தி செய்யப்பட்ட பட்டுப்புடவை அணிந்து தேசிய கொடியை ஏற்றினார்கள். எனவே, நமது மாவட்டத்தைச் சேர்ந்த மகளிர் சுயஉதவிக்குழுவினர்களால் உற்பத்தி செய்யப்படும் பட்டுப்புடவைகள் மற்றும் கைவினைப்பொருட்களை உலகளாவிய அளவில் விற்பனை செய்யும் வகையில் மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள மின்வணிகம் மூலம் உள்ளூர் நெசவாளர்களுக்கு வாழ்வாதாரம் வலம்பெரும் வகையில் அவர்களால் உற்பத்தி செய்யப்படும் பட்டுப்புடவைகளை அதிக அளவில் வாங்கி நெசவாளர்களுக்கும், நமது மாவட்டத்திற்கும் பெருமை சேர்க்க வேண்டும் என மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் **திரு.எஸ்.எஸ்.சிவசங்கர்** அவர்கள் தெரிவித்தார்கள்.

**பின்னர், உங்கள் தொகுதியில் முதலமைச்சர் என்ற திட்டத்தின்கீழ் தனித்துவமான அணுகுமுறை மற்றும் திறன்மிக்க செயல்பாட்டால் குறிப்பிட்ட காலத்தில் உங்கள் தொகுதியில் முதலமைச்சர் துறையில் பெறப்பட்ட மனுக்கள் மீது சிறப்பான நடவடிக்கை எடுத்து, தீர்வு கண்டதனை பாராட்டி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடமிருந்து பாராட்டுச் சான்றிதழ் மற்றும் கேடயம் பெற்றத்தையொட்டி, மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கு வாழ்த்துத் தெரிவித்தார்கள்.**

மேலும், அரியலூர் மாவட்டத்தில் அடுத்த 5 ஆண்டுகளில் மாவட்ட வளர்ச்சிக்கு மாவட்ட ஊராட்சிகள் செயல்படுத்தப்பட வேண்டிய உள்கட்டமைப்பு வசதிகள் மற்றும் செயல்பாடுகள் குறித்த குறுந்தகட்டினை மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் **திரு.எஸ்.எஸ்.சிவசங்கர்** அவர்களிடம் காண்பித்து, மாவட்ட வளர்ச்சிப் பணிகள் குறித்தும், செயல்படுத்த வேண்டிய திட்டங்கள் குறித்தும், **அரியலூர் மாவட்டத்தில் சுற்றுலாத்துறை சார்பில் செயல்படுத்தப்படவுள்ள வளர்ச்சித்திட்டங்கள் குறித்தும்** மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் விளக்கம் அளித்தார்கள்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.இரா.ஜெய்னுலாப்தீன், திட்ட இயக்குநர் (ஊரக வளர்ச்சி முகமை) திரு.சு.சுந்தர்ராஜன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திருமதி.அ.பூங்கோதை மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**